DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.346/2019

PROSECUTION WITNESS L.W.7/P.W.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான் பாட்ஷா | தகப்பனார் பெயர் | அப்துல் சுக்கூர் |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | டெய்லர் | வயது | |

**(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 26.11.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். டெய்லர் வேலை செய்து வருகிறேன்.

2) வழக்கில் இறந்து போன இரசீத் எனது மகன் ஆவார். 2006 ம் வருடம் எனது மகன் அவரது நண்பர்களுடன் ஈரோடு வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடப்பதாகவும், அந்த போட்டிகளில் கலந்து கொள்ள போவதாகவும் கூறிவிட்டு ஈரோடு வந்தார். மாலை 3.30 மணியளவில் சத்தியமங்கலம் DSP அலுவலகத்தில் இருந்து எனக்கு போன் செய்து எனது மகன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நானும், எனது குடும்பத்தாரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு, ஈரோடு நல்லி மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது, எனது மகன் இறந்திருந்தார். பூங்காவில் இருக்கும் நீச்சல் குளத்தில் மூழ்கி இறந்துவிட்டதாக கூறினார்கள். எனது மகனுக்கு நீச்சல் தெரியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது மகன் Friends of Police ல் இருந்தார் என்றால் ஆமாம். இழப்பீடு கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம்.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.26 15:23:07 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.346/2019

PROSECUTION WITNESS L.W.8/P.W.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலிபுல்லா | தகப்பனார் பெயர் | காதர் பாட்ஷா |
| கிராமம் | பவானி | ஊர் | ஈரோடு |
| தொழில் | விவசாயம் | வயது | |

**(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 26.11.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு பவானியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.

2) இறந்து போன இரசீத் எனது தம்பி மகன். 15 வருடங்களுக்கு முன் எனது தம்பி மகன் அவரது நண்பர்களுடன் ஈரோடு வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடப்பதாகவும், அந்த போட்டிகளில் கலந்து கொள்ள போவதாகவும் கூறிவிட்டு ஈரோடு வந்தார். மாலை 5.00 மணியளவில் இரசீத்துடன் விளையாட சென்ற அவரது நண்பர் பெயர் தெரியவில்லை, எனக்கு போன் செய்து எனது தம்பி மகன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நானும், எனது குடும்பத்தாரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது, எனது தம்பி மகன் இறந்திருந்தார். பூங்காவில் இருக்கும் நீச்சல் குளத்தில் மூழ்கி இறந்துவிட்டதாக கூறினார்கள். எனது தம்பி மகனுக்கு நீச்சல் தெரியுமா என்பது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**
**இல்லை.**
**மறு விசாரணை**
**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.26 15:23:23 +0530

Judicial Magistrate No.I,
Erode.